DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:**S.C.No.54/2025**
Prosecution Witness **P.W.20**

Name : **திரு.செல்வகுமரன்** Caste:

Father's Name :**திரு.** Calling :

Village: Religion :

Taluk : Age:

A1 to A6 எதிரிகள் ஆஜர்
**நாள்: 16.06.2026**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

நான் தற்போது தேனி மதுவிலக்கு காவல் பிரிவில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 05.09.2024ம் தேதியன்று 23.45 மணியளவில் சின்னமனூர் காவல் நிலைய குற்ற எண் 349/2024, தொடர்புடைய அடையாளம் தெரியாத சுமார் 35-45 வயது மதிக்கத்தக்க ஆண் பிரேதம் வெள்ளை முண்டா பனியன் மற்றும் சிமெண்ட் கலர் வேஷ்டி வெள்ளை மற்றும் மஞ்சள் கலர் பார்டர் போட்ட நபரின் அடையாளம் கொண்ட பிட்நோட்டீஸ் சுமார் 50-ஐ என்னிடம் கொடுத்து அதனை நான் பெற்றுக் கொண்டு மார்க்கையன்கோட்டை, குச்சனூர், துரைச்சாமிபுரம், சங்கராபுரம், புலிகுத்தி ஆகிய இடங்களில் மக்கள் கூடும் இடத்தில் அந்த நோட்டீஸ் ஒட்டி பொதுமக்கள் பார்வைக்கு வைத்து நிலையம் வந்து சேர்ந்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் துண்டு பிரசுரம் அ.த.சா.ஆ.8 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் தாக்கல் செய்துள்ள துண்டு பிரசுரத்தில் நகல் மட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது, அசல் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் ஆய்வாளர் விசாரணையில் எந்த இடத்தில் வைத்து துண்டு பிரசுரம் ஒட்டினேன் என்பதை குறிப்பாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு அவ்வாறு துண்டு பிரசுரம் ஒட்டினேன் என்பதை ஆய்வாளர் விசாரணையில்

சொல்லவில்லை என்றால் சரிதான். அவ்வாறு துண்டு பிரசுரத்தில் தாசில்தார் அலுவலகம் காவல் நிலையம் மற்றும் பேருந்து நிறுத்தங்களில் ஒட்டப்பட்டது என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் எதனையும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. அ.சா.ஆ.8 ஆய்வாளரால் வழங்கப்பட்டது என்ற வகையில் ஆய்வாளரின் கையொப்பம் ஏதும் இல்லை என்றால் சரிதான். அசல் புகைப்படம் என்னிடம் காட்டப்படவில்லை என்றும், அந்த புகைப்படத்தில் ஆய்வாளரின் கையொப்பம் இல்லை என்று சொன்னால் சரிதான். துண்டு பிரசுரம் ஒட்டப்பட்டது என்பதை காட்டக்கூடிய வகையில் பொதுமக்களிடம் அத்தாட்சி தயாரித்து கையொப்பம் வாங்கவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் விசாரணையில் இறந்து போன நபர் மஞ்சள் கலர் பார்டர் போட்ட வேஷ்டி போடவில்லை என்று சொல்லவில்லை என்றால் சரிதான். துண்டு பிரசுரத்தை நான் தான் ஒட்டினேன்.

3. நான் ஒரு நபரே 50 பிரதிகளை பல்வேறு இடங்களில் ஒட்டியிருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ.8 ல் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. ஆய்வாளர் என்னை எங்கு வைத்து எத்தனை மணிக்கு விசாரித்தார் என்று எனக்கு நினைவில்லை. ஆய்வாளர் என்னை 06.09.2024ம் தேதியன்று காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார். நான் அன்றைய தேதியில் பணியில் இருந்தேன் என்பதை காட்டக்கூடிய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். துண்டு பிரசுரத்தை இரவில் ஒட்டமாட்டார்கள் என்றும், பகலில் தான் ஒட்டுவார்கள் என்றால் சரியல்ல. அசா.ஆ.8 பின்னிட்டு தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை</u>

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

Sd/–A.SARAVANAKUMAR
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.